Koviloor Digital Library

॥ ஸ்ரீ ஹரி: ॥

8

நாம் ஏன் கடவுளை நம்ப வேண்டும்?

No: 12901

கோபால் ஸேவா ட்ரஸ்ட், ஈரோடு-3.

Koviloor Digital Library

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 12901
Z

8

ஸ்ரீ ஹரி:

நாம் ஏன் கடவுளை நம்ப வேண்டும்?

5-5

ஸ்வாமி ராம்ஸுகதாஸ் எழுதிய "கீதா தர்ப்பணம்" என்னும் புத்தகத்திலிருந்து

மற்ற தத்வ நூல்களைக் காட்டிலும கீதையில் ஈசுவரவாதம் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது. ந்யாயம், வைசேஷிகம், யோகம், ஸாங்க்யம், பூர்வமீமாம்ஸை, உத்தரமீமாம்ஸை இந்த ஆறு தர்சனங்களும், (தத்வ நூல்களும்) ஜீவர்களின் நன்மைக்னெவே எழுந்தவை. ஆனால் இவற்றில் ஈசுவர விளக்கம் முக்யமாக இடம் பெறவில்லை. இவற்றுள் ந்யாய தரிசனத்தில், 'நடப்பதெல்லாம் ஈசுவரனின் இச்சைக் கேற்றவாறு நடக்கிறது!' என்று மட்டும் சொல்லி, அவருக்குப் பெருமை தரப்பட டிருக்கிறது. ஆனாலும் முக்திக்கு ஈசுவரனின்

AccNO 12901

Koviloor Digital Library

இன்றியமையாமையை அது ஏற்றுக் கொள்ளவில்லை. இருப்பத்தொரு வகைத் துக்கங்களை அழிப்பதையே அது முக்தி என்று பேசுகிறது. வைசேஷிக தர்சனமும் ஜீவனின் மங்களத்துக்கு (தெய்வீக நலனுக்கு) ஈசுவரனுடைய தேவையைப் பற்றிச் சொல்ல வில்லை. ''ஆத்யாத்மிகம்'' (உடல் சார்ந்த) ''ஆதிதைவிகம்'' (தெய்வம்தரும்), ''ஆதிபௌதிகம்'' (பஞ்சபூதங்கள் விளைவிக்கும் தாபங்கள்) என்று மூன்று வித தாபங்களின் அழிவுதான் சொல்லப் பட்டிருக்கிறது. சித்த விருத்தியை நிறுத்துவதைப் பற்றியே யோகதர்சனத்தில் முக்யமாகப் பேசப்பட் டிருக்கிறது. சித்தவிருத்தி அடங்கினால், தன் ஸ்வரூபத்தில் நிலைத்தல் என்பது (இருப்பு) ஏற்படும். ஆம்! சித்தவிருத்தி அடக்கத்தில் ஈசுவரனை அண்டுதல் (ஈஸ்வர ப்ரணித$_4$ாநம்) அதாவது சரணாகதியையும் ஓர் உபாயமாக அங்கே சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் அந்த உபாயத்துக்கும் முக்யத்துவம் தரப்படவில்லை. ஜீவனின் நன்மைக்கு ஈசுவரன் அவசியம் என்றே ஸாங்க்யமும் பூர்வ மீமாம்ஸையும் கருதவில்லை. உத்தரமீமாம்ஸை அதாவது வேதாந்த விசாரத்தில் ஈசுவரனைப் பற்றிய பேச்சு சிறப்பாகக் காணப்படவில்லை. ஆனால் ஜீவப்ரம்ம ஐக்கியமே விசேஷமாக விளக்கப்படுகிறது. வைணவ ஆசார்யர்கள் ஈசுவரனின் சிறப்பைப்பற்றிச்

Koviloor Digital Library

சிறப்பாகப் பேசினாலும் கீதை எப்படிக் கூறியிருக்கிறதோ, அப்படிப் பேசவில்லை.

ஸ்ரீமத்பகவத் கீதையில் ஈசுவர பக்தியைப் பற்றிய விஷயம் முக்யமான இடம் பெற்றிருக்கிறது. அர்ஜுனன் பகவானிடம் சரணடைந்த பின்னரே பகவான் அவருக்கு உபதேசம் செய்யமுற்படவில்லை. அர்ஜுனன் பகவானைச் சரண் அடைந்து, "எனக்கு எது நன்மை?" என்று கேட்டபிறகு தான் பகவான் கீதையை உபதேசிக்கத் தொடங்கினார். உபதேச முடிவிலும் கூட பகவான், **'மாமேகம் ஶரணம் வ்ரஜ'** (என் ஒருவனையே சரணடை) 18/66, என்று சொல்லி சரணாகதியை மிகவும் ரஹஸ்யமானதென்றும், மிகச் சிறந்ததென்றும் சொன்னார். அர்ஜுனனும் **'கரிஷ்யே வசநம் தவ'** (18/73) (நீங்கள் சொன்னபடி செய்கிறேன்) என்றார். இவ்வாறு சொல்லி முழுமை யாகச் சரணாகதி நிலையை மேற்கொண்டார்.

கீதையில் பேசப்படும் கர்மயோகத்திலும் ஈசுவரனுடைய கட்டளை என்ற வடிவத்தில், ஈசுவரனின் முக்யத்துவம் பேசப்பட்டிருக்கிறது. **'கர்மண்யேவாதி$_4$காரஸ்தே மா ப$_2$லேஷுகத$_3$ாசந'** (2/47) (செயல் செய்யத் தான் உனக்கு உரிமை; விளைவின் மேல் ஒரு போதும் இல்லை) என்றும்; **யோக$_3$ஸ்த$_2$: குரு கர்மாணி** (2/48), **'நியதம் குரு**

Koviloor Digital Library

கர்மத்வம்' (3/8) (உனக்கு விதிக்கப்பட்ட செயலைச் செய்) என்றும்; **'குரு கர்மைவ தஸ்மாத் த்வம்'**(4/15) (அதனால் கர்மத்தையே செய்) என்றும், மேலும் பல இடங்களிலும் இவ்வாறே கூறியுள்ளார்.

இவ்விதமே கீதையில் கூறப்பட்டிருக்கும் ஞானயோகத்திலும், ஈசுவரன்பால் அங்கிங் கலையாத பக்தியையே ஞானம் அடைய ஸாதனம் என்று கூறப்பட்டிருக்கிறது (கீதை 13/10; 14/26).

கீதையின் மூலத்தை நன்கு படித்தால் ஜீவன் சிறந்ததான மங்களம் அடைய ஈசுவரன் மிகவும் தேவை என்று விளங்கி விடுகிறது.

நாம் தெரிந்து கொள்ள வேண்டியவை :

கேள்வி 1 : ஈசுவரனை நாம் ஏன் ஒத்துக் கொள்ள வேண்டும்?

பதில் : ஈசுவரன் இருக்கிறார், அதனால் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

கேள்வி 2 : ஈசுவரன் இருக்கிறாரா, இல்லையா — அதை எப்படித் தெரிந்து கொள்வது?

பதில் : உலகில் எந்தப் பொருள் காணப்பட்டாலும் அதைப் படைத்தவர் அல்லது ஆக்கியவர் ஒருவர்

Koviloor Digital Library

இருந்திருக்க வேண்டும். ஏன் என்றால் ஆக்குபவன் அல்லது செய்பவன் இல்லாமல் எந்தப் பொருளும் உருவாக முடியாது. இவ்விதமே கடல், பூமி, சந்திரன், சூரியன், வாயு, நக்ஷத்ரங்கள் முதலிய நம்மால் காணப்படும் எல்லாப் பொருள்களுக்கும், அவற்றைப் படைத்தவர் ஒருவர் நிச்சயமாக இருக்கத் தான் வேண்டும். இவற்றை ஆக்கியவர் நம்மைப் போன்ற ஸாதாரண மனிதனாக இருக்க முடியாது. ஏன் என்றால் இவற்றை மனிதனால் உண்டாக்க முடியாது. இவற்றைப் படைத்தவர் ஸர்வ வல்லமையுள்ள ஈசுவரனாகத் தான் இருக்க முடியும். மற்றொரு விஷயம், கடல் தன் கரைக்குள் அடங்கி நிற்கிறது. சந்திரன், சூரியன் குறிப்பிட்ட நேரத்தில் தோன்றி மறைகின்றன. இம்மாதிரி யானவற்றைப் பார்க்கும் போது, இவற்றை நடத்துகிறவர், அடக்குகிறவர் ஒருவர் இருக்க வேண்டும். இவற்றை நடத்துகிறவர் ஸர்வ வல்லமை படைத்த ஈசுவரனாகத்தான் இருக்க முடியும்.

கேள்வி 3 : கடல், பூமி, சந்திரன் முதலியவற்றைப் படைப்பதும், ஆட்டி வைப்பதும் இயற்கை அல்லவா? எல்லாம் இயற்கையால் தான் நடக்கிறது. அப்படி இருக்க, ஈசுவரன் இவற்றைப் படைத்து, ஆட்டி வைக்கிறார் என்று ஏன் ஒப்புக் கொள்ள வேண்டும்?

Koviloor Digital Library

பதில் : நான் ஒன்று கேட்கிறேன்; இயற்கை ஜடமா, சேதனமா? அதாவது அதற்கு அறிவிருக்கிறதா, இல்லையா? நீங்கள் 'இயற்கை அறிவுள்ளது' என்று விடையிறுத்தால், அதைத் தான் நாங்கள் 'ஈசுவரன்' என்கிறோம். நம்முடைய சாஸ்த்ரங்களில் சக்தியை ஈசுவர ஸ்வரூபமாக வர்ணித்திருக்கிறார்கள். எனவே உங்களுடைய நம்பிக்கைக்கும், எங்களுடைய நம்பிக்கைக்கும் பெயரளவில் தான் மாறுபாடே தவிர, உண்மையில் கொள்கையில் மாறுபாடு கிடையாது. ஆனால் நீங்கள் ப்ரக்ருதி 'ஜடம்' தான் என்று ஒத்துக் கொண்டால், ஜடப்ரக்ருதியின் மூலமாக அறிவு பூர்வமான செயல் ஏற்பட முடியாது.

உயிர்களைப் படைத்தல், அவர்களுக்குச் சுப, அசுப (நல்ல, தீய செயல்களுக்கேற்ற) கர்மங் களுக்குரிய பலனைத் தருதல் போன்ற செயல்கள் ஜடப்ரக்ருதி மூலமாக நடக்க இயலாது. ஏன் என்றால், அறிவு பூர்வமான செயல்பாட்டினால் அன்றி உயிர்களின் விதிமுறை அமைப்பும், ஏற்பாடுகளும் அமைய முடியாது. ஜடப்ரக்ருதியில் மாற்றம் ஏற்படுவது உண்மைதான். ஆனால் அதனிடத்தில் "அறிவுபூர்வமாகச் செயல் செய்வதற்குரிய ஆற்றல் கிடையாது. எனவே ஈசுவரன் இருக்கிறான்" என்றே ஒத்துக் கொள்ள வேண்டும்.

Koviloor Digital Library

ஒரு சாரார் ஈசுவரன் இல்லை என்கிறார்கள்; மற்றொரு சாரார் ஈசுவரன் இருக்கிறார் என்று சொல்கிறார்கள். ஈசுவரன் இல்லை என்பது உண்மையாகிப் போனால் ஈசுவரனை இருக்கிறார் என்று ஒத்துக் கொள்ளாதவர்கள் ஒத்துக் கொள்பவர் இரண்டு சாராருமே, ஸமநிலையில் இருப்பார்கள்; அதாவது ஈசுவரனை ஒத்துக் கொள்பவர்களுக்கு ஓர் இழப்பும் ஏற்படாது. ஆனால் ஈசுவரன் இருப்பது உண்மை என்றாகிவிட்டால் ஈசுவரனை ஒத்துக் கொள்பவர்களுக்கு 'ஈசுவரனை அடைவது' என்பது நடக்கக் கூடிய செயலாகிவிடும். அதாவது அவர்கள் ஈசுவரனை அடைந்து விடுவார்கள். ஆனால் ஈசுவரன் இருப்பதை மறுத்து வருகிறவர்களுக்கு, எல்லா விதங்களாலும் வெறுமையே மிஞ்சும். எனவே ஈசுவரன் இருக்கிறார் என்று ஒத்துக் கொள்வதே இருசாரார்க்கும் நல்லதாகவும், சரியாகவும் இருக்கும். ஆனால் ஈசுவரனை ஒத்துக் கொள்வதுடன் மட்டும் திருப்தி அடைந்து விடக் கூடாது, தொடர்ந்து அவரை அடைந்து விடவும் வேண்டும். ஏன் என்றால், ஈசுவரனை அடையும் ஆற்றல் மனிதப் பிறவிக்கு மட்டுமே உண்டு.

எந்தப் பொருளும் கிடைத்த பிறகே அது 'இல்லை'என்று மறுப்பு எழுப்ப வாய்ப்பு ஏற்படும்.

Koviloor Digital Library

(இல்லாத ஒரு பொருளைப் பற்றி இருக்கிறதா, இல்லையா என்ற சர்ச்சை எழவாய்ப்பே இல்லை. அதே போல் அதை மறுக்கும் பேச்சே எழாது) **'ப்ராப்தெள ஸத்யாம் நிஷேத$_3$:'** கிடைத்த போதுதான் நிஷேதம் அல்லது மறுப்பு ஸாத்யம். 'குதிரைக்கு முட்டை கிடையாது' என்று யாரும் பேசுவது கிடையாது; ஏன் என்றால் இல்லாத ஒன்றை மறுப்பது தேவையற்றது. இவ்விதமே ஈசுவரன் இல்லவே இல்லை என்றால், பிறகு ஈசுவரன் இல்லை என்று பேச்சே எழாது. இவ்விதம் சர்ச்சை செய்வது ஈசுவரன் இருந்தால்தான் சாத்தியமாகும். எனவே 'ஈசுவரன் இல்லை என்று மறுப்பதே' ஈசுவரன் இருப்பதற்கு ஒரு ப்ரமாணமாகி விடுகிறது.

ஒருவன் ஆங்கில மொழியை உயர்வாக மதித்தால் அவன் அதை முயன்று பயில்வான்; படிப்பான். அப்படிச் செய்தால் ஆங்கில மொழியறிவு அவனுக்கு வந்து விடும். மாறாக எவன் ஆங்கில மொழியை ஏற்க வில்லையோ, அவன் அதை அறிந்து கொள்வதற்கு முயற்சி செய்வானா, என்ன? ஓர் எடுத்துகாட்டைப் பார்க்கலாம். ஒருவனுக்கு அவனுடைய உறவினர் மிகவும் நோய் வாய்ப்பட்டு இருக்கிறான் என்று ஆங்கிலத்தில் தந்தி வந்தது. ஆங்கிலம் அவனுக்குத் தெரியாது. ஆங்கிலம் அறிந்த

Koviloor Digital Library

மற்றொருவன், அதைப் படித்துப் பொருள் கூறினான். அவன் தந்தியில் சொல்லப்பட்டிருந்த இடத்திற்குச் சென்று பார்த்தான். உண்மையிலேயே அந்த உறவினன் நோய் வாய்ப்பட்டு இருந்தான். இப்போது ஆங்கில மொழி என்று ஒன்று உண்டு என்று ஒத்துக் கொள்ளத்தானே வேண்டும்? அதனால் தான் தந்தியில் வந்த செய்தி உண்மை என்று ஆயிற்று. அதேபோல் ஈசுவரனையடைய, உண்மை உள்ளத்துடன் ஈடுபடு கிறவர்களிடத்தில் மற்ற ஸாமான்ய (ஈசுவரனை அடைய முயற்சி செய்யாத) மக்களிடத்தில் காணக் கிடைக்காத ஒரு சிறப்பு காணப்படுகிறது. அவர்களுடன் சேர்ந்தால், அவர்களுடைய பேச்சைக் கேட்டால், மனஅமைதி கிடைக்கிறது. மனிதர்களுக்கு மட்டுமல்ல; விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் கூட சாந்தி ஏற்படுகிறது. ஈசுவரனை அடைந்து விட்ட அவர்களிடத்தில் ஸாதாரண மனிதர்களிடம் காணப் படாத மிகவும் தனித்ததான ஒருவித சிறப்பு காணப் படுகிறது. ஈசுவரன் இல்லை என்றால் அவர்களிடம் அந்தத் தனித்தன்மை, மாறுபாடு எப்படி ஏற்பட்டிருக்க முடியும்? எனவேஈசுவரன் இருக்கிறான் என்ற ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

தமக்குள் ஏதோ ஒரு குறை இருப்பதை, நிறைவின்மையை மனிதர்கள் மட்டுமே உணர்

Koviloor Digital Library

கின்றனர். இந்த முழுமையின்மையை முழுமையாக்க வேறு ஒரு பொருள் இல்லை என்றால் அவனுக்கு இந்தக் குறைபாடு இருப்பது தோன்றவே தோன்றாது. எப்படி என்றால் மனிதனுக்குப் பசி உண்டாகிறது. அதிலிருந்து, சாப்பிடக்கூடிய பொருள் ஒன்று இருக்கிறது என்பது பெறப்படுகிறது. சாப்பிடும் பொருள் என்று ஒன்று இல்லை என்றால், மனிதன் பசியை உணர மாட்டான். பசி ஏற்படவே ஏற்படாது. தாகம் எடுக்கிறது என்றால் குடிக்கத் தகுந்த ஒரு பொருள் இருக்கிறது என்ற உண்மை நிரூபண மாகிறது. குடிக்கத்தக்க, குடிக்க வேண்டிய பொருளே இல்லை என்று இருக்குமாயின் மனிதனுக்கு தாகம் என்பதே ஏற்படாது. இவ்வாறே மனிதனுக்கு 'முழுமையின்மை' என்பதன் அனுபவம் ஏற்படுகிறது என்றால், பூர்ணத்வம் என்று ஏதோ ஒன்று இருக்கிறது என்கிற உண்மை உறுதியாகிறது. பூர்ணத்வம் இல்லா மலிருந்தால் மனிதன் தன்னிடம் முழுமையின்மை உள்ளது என்ற அனுபவத்தை அடைய மாட்டான். அந்த பூர்ணதத்வத்தை தான் ஈசுவரன் என்று சொல்கிறார்கள். எந்த வஸ்து இருக்கிறதோ அதை அடையத் தான் ஆசை ஏற்பட முடியும். இல்லாத ஒரு பொருளின் மேல் யாருக்கும் விருப்பம் ஏற்பட முடியாது. உதாரணமாக யாருடைய உள்ளத்திலும்

Koviloor Digital Library

'ஆகாயத்தின் பழங்களைச் சாப்பிட வேண்டும், என்னும் விருப்பம் ஏற்படுவதில்லை. ஏன் என்றால் ஆகாயத்தில் பூ பூப்பதும் கிடையாது. பழம் பழுப்பதும் கிடையாது. நான் சாகக்கூடாது; எப்போதும் இருக்க வேண்டும் என்னும் விருப்பம் மனிதகுலத்துக்கு மட்டுமே ஏற்படும். எல்லாவற்றையும் அறிய வேண்டும்; ஒரு பொழுதும் அறியாதவனாக இருக்கக் கூடாது; எப்போதும் ஸுகம் அனுபவிப்பவனாக இருக்க வேண்டும்; துக்கம் ஏற்படவே கூடாது, என்ற ஆசைகளும் மனிதருக்கே ஏற்படுகின்றன. 'நான் எப்போதும் உயிருடன் இருக்க வேண்டும்' என்பது 'ஸத்'தின் இச்சை; 'எல்லாவற்றையும் நான் அறிய வேண்டும்' இது 'சித்'தின் இச்சை; 'எப்போதும் நான் ஆனந்தமாக இருக்க வேண்டும், இது ஆனந்தத்தின் இச்சை. இதிலிருந்து ஸச்சிதானந்த சொரூபம் என்று ஒன்று இருக்கிறது என்பதும் அதை அடைய பெருவிருப்பம் மனிதர்களுக்கு மட்டும் ஏற்படுகிறது என்பதும் உறுதியாகிறது. அந்த ஸச்சிதானந்த தத்வத்தையே 'ஈசுவரன்' என்கிறோம்.

ஒருவன் யாரையாவது தன்னைவிடப் பெரியவனாக ஏற்றுக் கொள்வானானால், அவன் உண்மையில் ஈசுவரவாதத்தை வாஸ்தவத்தில் ஏற்றுக் கொண்டு விட்டான் என்றுதான் பொருள். ஏன்

Koviloor Digital Library

என்றால் 'பெரியது, அதைக் காட்டிலும் பெரியது' என்ற சங்கிலித் தொடர் எங்கே சென்று முடிவடையுமோ, அதுதான் ஈசுவர தத்துவம். **'பூர்வேஷாமபி கு$_3$ரு; காலேநாநவச் சேதாத்'** (பாதஞ்சல யோக$_3$ த$_3$ர்ஶனம் 1/26). ஒரு மனிதன் இருக்கிறான் என்றால் அவனுக்குத் தந்தை உண்டு. அவனுக்குத் தந்தை, தந்தைக்குத் தந்தை என்று வரிசையாகப் பார்த்தோமானால் அந்த வரிசை எங்கே சென்று முடியுமோ அங்கே இருப்பவர் தான் ஈசுவரன் **'பிதாஸி லோகஸ்ய சராசரஸ்ய'** (கீதை 11/43) 'இந்த சராசர உலகத்தின் தந்தை நீ!' பலசாலி ஒருவன் இருக்கிறான் என்றால் அவனுக்கு மேற்பட்ட பலசாலி உண்டு. இந்த வலிமைத் தொடர்ச்சி எங்கே சென்று முடியுமோ அதன் பெயர் தான் ஈசுவரன். ஏன் என்றால் அவரை ஒத்த அல்லது அவரினும் மேம்பட்ட பலவான் இல்லை. ஒருவன் அறிவாளி என்றால் அவனை விட அறிவில் மிக்கவன் இருப்பான். இப்படி அறிவின் மேம்பட்ட தன்மையை நீட்டித்துக் கொண்டே போனால் அறிவின் எல்லை எங்கே சென்று நிற்குமோ அதுதான் ஈசுவரன். ஏன் என்றால் ஈசுவரனுக்கு நிகரான அறிவாளி யாரும் இல்லை. **'கு$_3$ருர்க$_3$ரீயாந்'** (கீதை 11/43) பெரியவர்களுக் கெல்லாம் பெரியவர் அதாவது 'குருவிற்கு குரு'. கருத்துஎன்ன என்றால் பலம்,

Koviloor Digital Library

வித்யை (அறிவு) தகுதி, ஐச்வர்யம், அழகு முதலிய குணங்களின் எல்லை எங்கே உள்ளதோ, அங்கே தான் ஈசுவரன் உள்ளார். ஏன் என்றால் அவரை ஒத்தவர் வேறு யாரும் இல்லை. **ந த்வத்ஸமோ஽ஸ் த்யப்$_3$ யதி$_3$க: குதோ஽ன்ய :** (கீதை 11/43) அவருக்கு ஒத்தவரே இல்லை என்னும்போது அவரை விஞ்சியவர், என்ற நினைப்புக்கே இடமில்லை.

உண்மையில் ஈசுவரன் இருக்கிறார் என்பது ஒப்புக் கொள்ளப்பட வேண்டிய விஷயம் ; வாதத்துக்குரிய விஷயம் அன்று. எதைப் பற்றி அறிந்து கொள்ள ஆவல் ஏற்படுகிறதோ, அதுதான் தர்க்கத்துக்குப் பொருளாக ஆகமுடியும். எந்தப் பொருளைப் பற்றி நமக்குச் சிறிதளவு தெரிந்தது போலவும், சிறிதளவு தெரியாததைப் போலவும் இருக்கிறதோ அதைப் பற்றி அறியத்தான் ஆவல் இருக்கும். எதைப் பற்றி நாம் கொஞ்சம் கூட அறிய மாட்டோமோ அதைப் பற்றி அறியும் ஆவல் ஏற்படாது. அதைப் பற்றியச் சிந்தனையும் ஏற்படாது. அதை ஒப்புக் கொள்ளலாம். ஒப்புக் கொள்ளாமல் இருக்க லாம். அதற்கு நமக்கு சுதந்திரம் உண்டு. சற்றுப் பாருங்கள். இந்த உலகம் இருப்பதை நாம் கண்களால் பார்க்க முடிகிறது. ஆனால் உலகம் தத்வ அடிப்படையில் என்ன என்று நாம் முழுமையாக

Koviloor Digital Library

அறியவில்லை. எனவே (புரிந்தும் புரியாமல் இருப்ப தால்) உலகம் ஆய்வுக்கு சிந்தனைக்கு, அதாவ்து ஆராய்ச்சிக்கு உரிய - பொருளாகின்றது. இவ்விதமே ஜீவாத்மா அசைவனவாகவும், அசையாதவையாகவும், (ஸ்தாவரம் - ஒரே இடத்தில் நிலை பெற்று, ஓரிடத்தி லிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்ல முடியாதது; ஜங்கமம் - ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்லக் கூடியது.) ஸ்தாவர ஜங்கம ரூபமான உடலுடையதாகக் காணப்படுகிறது. ஆனால் ஜீவாத்மாவின் தத்வரூபம் என்னதென்று இதை அறியவில்லை. எனவே ஜீவாத்மா ஆராய்ச்சிக்குட் பட்ட விஷயம். ஆனால் ஈசுவரன் விஷயத்தில் நமக்கு ஒன்றுமே தெரியாது.எனவே ஈசுவரன் தர்க்கத்திற்கு - வாதப்பிரதிவாதத்திற்குரிய விஷயமாக ஆக முடியாது.நேர் மாறாக அது நம்பிக்கைக்குரிய அதாவது ஒப்புக் கொண்டு ஏற்றுக் கொள்ள வேண்டிய உண்மை. சாஸ்திரங்கள் சொல்லுகின்றன, ஈசுவரனை அடைந்த, ஈசுவரனைக் கண்கூடாகக் கண்ட (மஹாத்மாக்கள்) ஸாதுக்கள் சொல்கிறார்கள். அவர்கள் சொல்வதை நம்பியே ஈசுவரனை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆம், சாஸ்திரங்களும் மஹாத்மாக்களுமே நம்பத்தக்கவர்கள். எப்படி என்றால், வேதங்கள், புராணங்கள் முதலியவற்றை ஹிந்துக்கள் நம்புகிறார்கள். ஆனால் முஸ்லீம்கள் நம்புவதில்லை.

Koviloor Digital Library

இவ்விதமே மஹாத்மாக்கள் ஸாதுக்கள், என்றிருப் போரைச் சிலர் நம்பி ஏற்றுக் கொள்கிறார்கள்; சிலர் ஏற்றுக் கொள்வதில்லை; அவர்களை ஸாதாரண மனிதர்களாகவே எண்ணுகிறார்கள்.

கேள்வி 4 : ஈசுவரன் இருக்கிறார் என்பதை ஒப்புக் கொள்ளாமலேயே மனிதன் கடைத்தேற முடியுமா? அதாவது உலகக் கட்டிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முடியுமா?

பதில் : ஆம், முடியும். ஈசுவரனை ஏற்றுக் கொள்ளாத சம்பிரதாயங்கள் இருக்கின்றன. அச்சம்பிரதாயங்கள் காட்டும் ஸாதனையில் முழுமையாக, உண்மையாக ஈடுபடுகிற மனிதர்கள் உலகபந்தத்திலிருந்து விடுபட முடியும். உலகியல் துயரங்களிலிருந்து தப்ப முடியும்; உண்மைதான். ஆனால் அவர்களுக்கு ஒவ்வொரு கணமும் பெருகிக் கொண்டே போகும் பரமானந்தம் கிடைக்காது; அதாவது 'பகவத்ப்ரேமை' கிடைக்காது. என்றாலும், அவர்களிடத்திலும், ஈசுவரனிடம் விரோதம், வெறுப்பு முதலியவையும் தங்கள் கருத்தில் பிடிவாதமும், இல்லாதிருந்தால் பகவானுடைய அன்பு கிடைக்கக்கூடும். அவர்கள் ஈசுவரனை நம்பாமல் இருந்தாலும் பரவாயில்லை. அதாவது ஒருவனுக்குத் தன் கொள்கையில் பற்றிருக்கிறது. ஆனால் மற்றவர் ஸித்தாந்தங்களை வெறுப்பதில்லை; நடுநிலையில்

Koviloor Digital Library

இருக்கிறான் என்றால், அப்படிப்பட்டவன் முக்தியடைந்த பிறகு பகவானை அடையலாம்; அவர் அன்பைப் பெறலாம். ''மனிதன் நான் இருப்பதை ஒப்பக் கொள்ள வேண்டும். அப்போது தான் அவனுக்கு நலம் அளிப்பேன்; இல்லையெனில் நலன் அளிக்க மாட்டேன்'' என்று பகவானிடத்தில் எவ்விதப் பிடிவாதமும் கிடையாது.

தோன்றி அழியும் பொருட்களிடத்தில் ஏற்படும். ஆசையே முக்திக்கு முக்யமான தடை. தோற்றமும், அழிவும் கொண்ட இந்தப் பதார்த்தங்களுடன் உறவின்மை - அவாவின்மை கொண்டவனாக மனிதன் ஆகிவிட்டால் அவன் முக்தனாகி விடுவான். அவனது அடிமைத்தனம் - அதாவது மற்ற பொருள்கள், உயிர்களுக்குக் கட்டுப்பட்டிருக்கும் நிலை போய்விடும்.

கேள்வி 5 : கீதையில் ஈசுவரன் எவ்வளவு உருவங்களில் வர்ணிக்கப் பட்டிருக்கிறார்?

பதில் : கீதையில் ஈசுவரன் மூன்று உருவங்களில் வர்ணிக்கப்பட்டிருக்கிறார். ஸகுண - ஸாகார உருவம், ஸகுண - நிராகார உருவம், நிர்குண நிராகார உருவம். அதாவது நாம் ஈசுவரனை ஸகுண - நிர்குணமாக எண்ணினோமானால் ஸகுணத்துக்கு இரண்டு

Koviloor Digital Library

உருவங்கள் உண்டு. அவை ஸகுண ஸாகாரம், ஸகுண நிராகாரம்; மேலும் நிர்குணம் என்பதில் ஒரு பேதம் - அதாவது நிர்குண நிராகாரம். ஆனால் ஈசுவரனை ஸாகார நிராகாரமாக எண்ணினால் ஸாகாரம் ஒரு பேதம் - அதாவது ஸகுண ஸாகாரம். நிராகாரத்திற்கு இரண்டு பேதங்கள். ஸகுண நிராகாரம், நிர்குண நிராகாரம் (குணம் தோற்றம் இரண்டுமே அற்றவை) கீதை 7ம் அத்யாயம் 29-30 ச்லோகங்களிலும், 8ம் அத்யாயம் எட்டாம் ச்லோகத்திலிருந்து 16வது ச்லோகங்கள் வரை, மேலும் 11ம் அத்யாயம் 18வது ச்லோகத்தில் ஈசுவரனுடைய ஸகுண ஸாகாரம், ஸகுண நிராகாரம், நிர்க்குண நிராகாரம் இம்மூன்று உருவங்களிலும் ஈசுவரனுடைய வர்ணனை வருகிறது.

கேள்வி 6 : சிலர் ஈசுவரன் மாயா மயமாக இருப்பதாகக் கருதுகிறார்கள். மாயையற்ற நிர்குண நிராகாரப் பிரம்மம் ஒன்றே என்றும், ஈசுவரன் மாயையுடன் கூடியவர் என்றும்அவர்கள் சொல்கிறார்கள். இந்தக் கருத்து எவ்வளவு தூரம் சரியானது?

பதில் : கீதை இப்படிச் சொல்லவில்லை. கீதை ஈசுவரனை மாயைக்கு அதிபதியாகக் கருதுகிறது. மாயை ஈசுவரனுடைய வசத்தில் இருக்கிறது. பகவான்,

Koviloor Digital Library

''நான் என் ப்ரகிருதியை என் வசப்படுத்திக் கொண்டு என் யோக மாயையினால் வெளியாகிறேன்'' (4/6) என்கிறார். கருத்து என்ன என்றால், எந்த ஜீவன்கள் மாயையில் சிக்கி இருக்கிறார்களோ அவர்களுக்குப் பாடம் புகட்டுவதற்காக, ஈசுவரன் மாயையைத் தம்முடையதாக்கிக் கொண்டு, தமது விருப்பத்தின்படி அவதாரம் எடுக்கிறார். இது எப்படி என்றால் ஓர் ஆங்கிலேயனுக்கு தமிழ் தெரியாது. அங்கே தமிழ் - ஆங்கிலம் - இரண்டும் தெரிந்த ஒருவர் தமிழில் எழுதியிருக்கும் விஷயத்தை ஆங்கிலத்தில் அவனுக்கு எடுத்து உரைக்கிறார். அப்போது அப்படி எடுத்துக் கூறுகிறவர் ஆங்கில மொழிக்கு அடிமையாகி விடவில்லை; அதற்கு வசப்பட்டவராக ஆகி விடுவதில்லை. ஏன் என்றால் மற்றவருக்குப் புரிய வைப்பதற்காக ஆங்கிலத்தை உபயோகப்படுத்து கிறார். ஆங்கிலத்தால் அவருக்கு ஒரு பயனும் இல்லை; அவருக்கு அது தேவையும் இல்லை; இவ்விதமே மாயையில் வீழ்ந்து கிடக்கும் ஜீவன் களுக்குப் பாடம் புகட்டவே ஈசுவரன் ப்ரக்ருதியைத் தமது வசப்படுத்திக் கொண்டு, அவதாரம் எடுக்கிறார். அதாவது ஜீவன்களுக்கு எதிரே தோன்றுகிறார்.

ஈசுவரன் மாயைக்கு அதிபதி அதாவது யஜமானன், தலைவன். இந்த உண்மையை கீதை

Koviloor Digital Library

திரும்பத் திரும்பவும், தெளிவாகவும் சொல்லி யிருக்கிறது. எடுத்துக்காட்டு : ஈசுவரன் ஜீவன்களின் யஜமானனாக இருந்து கொண்டே அவதாரம் எடுக்கிறார். (4/6) **பூ$_4$தாநாம் ஈச்வரோபிஸந்; ப்ரக்ருதிம் ஸ்வாமதி$_4$ஷ்ட$_2$ாய ஸம்ப$_4$வாம்யாத்ம மாயயா)**; ஈசுவரன் குணங்கள் கர்மங்களுக்கேற்ப நான்கு வர்ணங்களைப் படைக்கிறார். **(சாதுர்வர் ணயம், மயாஸ்ருஷ்டம் கு$_3$ணகர்ம விப$_4$ாக$_3$ச** : (4/ 13); எந்த மனிதன் தன்னுடைய விருப்பங்கள் நிறைவேறும் பொருட்டு, தேவதைகளை உபாசிக் கிறானோ, அவனுக்குப் பயன் தர வேண்டிய ஏற்பாட்டை ஈசுவரனே செய்கிறார். **(லப$_4$தே ச தத: காமாந் மயைவ விஹிதாந் ஹி தாந்** 7-22) மஹாப்ரளயத்தின் போது அனைத்து உயிர்களும் ப்ரக்ருதியில் லயமாகி விடுகின்றன. பிறகு படைப்பின் தொடக்கத்தில் ஈசுவரன் அவர்களைப் படைக்கிறார் (9/7-8)

ஸர்வபூத$_4$ாநிகௌந்தேயப்ரக்ருதிம் யாந்தி மாமிகாம் ।
கல்பக்ஷயே புநஸ்தாநி கல்பாதௌ$_3$ள விஸ்ருஜாம்யஹம்॥
ப்ரக்ருதிம் ஸ்வாமவஷ்டப்$_4$ய விஸ்ருஜாமி புந: புந: ।
பூதக்ர$_3$ாமமித$_3$ம் க்ருத்ஸ்நமவஶம் ப்ரக்ருதேர் வஶாத் ॥

எல்லா யோனிகளிலும் எவ்வளவு உடல்கள் பிறவி எடுக்கின்றனவோ, அவர்களுக்கு ப்ரக்ருதி

Koviloor Digital Library

தாயின் ஸ்தானத்தில் இருக்கிறது. ஈசுவரன் தந்தை போலும் இருக்கின்றார்.

மம யோநிர் மஹத்$_3$ ப்$_3$ரஹ்ம தஸ்மிந்க$_3$ர்ப$_4$ம்
த$_3$த$_4$ாம்யஹம் ।
ஸம்ப$_4$வ: ஸர்வபூ$_4$ தாநாம் ததோ ப$_4$வதி ப$_4$ாரத ॥
ஸர்வயோநிஷீ கௌந்தேய பூர்தய: ஸம்ப$_4$ வந்தி யா: ।
தாஸாம் ப்$_3$ரஹ்ம மஹத்$_3$ யோநிரஹம் பீ$_3$ஜப்ரத$_3$: பிதா॥
(கீதை 14/3-4)

ஈசுவரன் அனைத்து ப்ராணிகளின் இதயத்திலும் இருந்து கொண்டு ஜீவர்களின் சுபாவத்துக் கேற்றவாறு அவர்களை ஆட்டி வைக்கிறார். (18/61)எவ்விதம் பொற்கொல்லன் கருவிக்கு அடிமையாகாமல், அவற்றைக் கொண்டு நகைகளைச் செய்கிறானோ, - நகைகளுக்காக கருவிகளைப் பயன்படுத்துகிறானோ, அதே போல் ஈசுவரன் உலகைப் படைப்பதற்காகத்தான் ப்ரக்ருதியை ஏற்றுக் கொள்கிறார்.

தானே தளையில் சிக்கி உள்ள ஒருவன் எப்படி மற்றவரைக் கட்டிலிருந்துவிடுவிக்க முடியும்? அவனால் விடுவிக்க முடியாது. ஜீவன் தானே பந்தத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறான். எனவே மற்றவரைப் பிணைப்பிலிருந்து விடுவிக்க அவனால் எப்படி முடியும்? ஆனால் ஈசுவரன் கட்டின்றி

Koviloor Digital Library

இருப்பவர். எனவே பிணைப்பில் சிக்கியுள்ள ஜீவன்களை அவரால் (ஆம், அவர்கள் விரும்பினால்) விடுவிக்க முடியும். கீதை 18/66ல் : **"அஹம் த்வா ஸர்வ பாபேப்$_4$யோ மோக்ஷயிஷ்யாமி"** என்பது பகவானின் வாக்கு. நான் உன்னை எல்லாப் பாபங்களிலிருந்தும், (பிணைப்புக்களிலிருந்தும்) விடுவிப்பேன். மாயையில் சிக்கியுள்ள ஒரு ஜீவனை உபாஸிப்பதனால், உபாஸகன் பிணைப்பிலிருந்து முக்தி பெற முடியாது. கருத்து என்னவென்றால், ஈசுவரன் ஜீவனாக மாட்டார். ஆம் ஜீவன் அனன்ய பக்தியினால் (ஒரு முனைப்பட்ட, ஈசுவரனைத் தவிர வேறு எதிலும் நாட்டமில்லாது அவன் ஒருவனிடமே பக்தி கொள்வது.) ஈசுவரனுடன் பிரியாத ஐக்யத்தை அடைய முடியும், ஈசுவரனுடன் இணைய முடியும். ஒப்பிடுக : ஸமுத்$_3$ர ஏவ தாரங்க$_3$: ந தரங்க$_3$ஸ்து ஸமுத்ர : 'கடலே அலைகளாகின்றன ; அலைகள் கடலாவதில்லை.'

கேள்வி 7 : ஈசுவரனைப் போலவே, நகலாக உள்ளது எது?

பதில் : ஈசுவரனுடைய நகல் ஜீவாத்மா, ஏன் என்றால் ஈசுவரனும் நித்யமானவர், விகாரமற்றவர், ஜீவாத்மாவும் அப்படியே நித்யமாயிருப்பது, நிர்விகாரமாயிருப்பது, ஆனால் ஜீவாத்மா ப்ரக்ருதியின் வசப்

Koviloor Digital Library

பட்டிருப்பது. ஈசுவரனோ ஒரு போதும் ப்ரக்ருதியின் வசப்பட்டிருந்தது இல்லை, வசப்பட்டிருக்கப் போவதுமில்லை. வசப்படவும் மாட்டார்.

எல்லோருக்கும் 'நான் இருக்கிறேன்' என்ற உணர்வு இருக்கிறது. இதில் என்றுமே ஐயம் இல்லை. 'நான் இருக்கிறேனா, இல்லையா' என்று யாருமே ஒருபோதும் ஸந்தேஹம் கொள்வதில்லை. இதன் உண்மையை சோதித்துப் பார்க்க யாரும் முயல்வது மில்லை. 'ஸத்' என்பது அதாவது உள்ளதாயிருக்கும் தன்மை (உள்ள தன்மை), இல்லாது போகும் அனுபவமும் யாருக்கும் ஏற்படுவதில்லை. இந்த சரீரம் முன்னமேயும் இருந்ததில்லை. பின்னாலும் இருக்காது. ஆனாலும் தன் 'ஸத்தை' அதாவது இருப்பைப் பற்றி நினைக்கும்போது 'நான் இருந்தததில்லை' என்னும் உணர்வு ஏற்படுவ தில்லை. இது பற்றி தெரியவில்லை என்று வேண்டு மானால் சொல்லலாமே தவிர 'நான் இல்லை' என்று சொல்ல முடியாது. ஏன் என்றால், தன்னைப் பற்றியே தனக்கு தான் இல்லை என்ற அனுபவம் யாருக்குமே ஏற்படுவதில்லை. நிகழ்காலத்திலும், சரீரம் ஒவ்வொரு கணமும் அபாவத்தில் - இல்லாத நிலையில் - போய்க் கொண்டிருக்கிறது ; அதாவது இல்லாமல் போய்விடும் நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது. தன்

Koviloor Digital Library

அடிப்படை இருப்பிலிருந்து நகர்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் 'நான் அபாவத்தில் போய்க் கொண்டிருக்கிறேன்! என்ற அனுபவம் யாருக்கும் ஏற்படுவதில்லை. ஆனால் சரீரம் அபாவத்தில் போய்க் கொண்டிருக்கிறது. சரீரத்தின் அபாவத்தை - அதாவது இல்லாமல் போகும் அனுபவத்தை - எவன் 'இருப்பு' நிலையில் இருக்கிறானோ அவன் தான் உணர முடியும். 'இல்லை' என்று அறிபவன் 'இருக்கிறேன் என்ற ஸ்வரூபமாகத் தான் இருக்க முடியும். எனவே இதனால் சரீரம் இல்லாமல் போய்க் கொண்டிருப்பதை உணர்கிற அதாவது அறிகிற (ஜீவாத்மா) உண்மை 'ஸத்' ஸ்வரூபம் என்னும் உண்மை தெளிவாக்கப் பெறுகிறது.

பார்ப்பது, கேட்பது, அறிவது என்னும் வளையத்துக்குள் வரும் உலகம் முன்னமே இருந்ததில்லை. பின்னாலும் இருக்காது; தற்போதும் இல்லாமைப் பாதையில் தான் போய்க் கொண்டிருக்கிறது. ஸம்ஸாரம் நேற்று இருந்தபடி இன்று இல்லை; இன்றும் கூட ஒரு மணி நேரத்துக்கு முன்பு இருந்தது போல இப்போது இல்லை; எனவே உலகம் ஒவ்வொரு கணமும் 'இல்லாமையில்' தான் போய்க் கொண்டிருக்கிறது. ஆனால் மாறும் இந்த உலகம் எதன் ஆதாரத்தின் பலத்தால் உறுதியாக இருக்க முடியுமோ

Koviloor Digital Library

அப்படிப்பட்ட ஒளி தரும் ஆதாரம் அல்லது படைக்கும் தத்வம், ஸர்வ வல்லமை கொண்ட தத்வம் ஒன்று இருக்கிறது. அதில் ஒருவித மாறுதலும் ஒரு போதும் ஏற்படுவதில்லை. ஆனால் உலகில் தேசம், காலம், வஸ்து, வ்யக்தி, (தனி உயிர்) முதலியவற்றில் ஏற்படும் மாறுதலுக்கெல்லாம் அந்த மாற்றமில்லாப் பொருள் தான், அதாவது தத்வம் தான் நிலைக்களன் அடித்தளம். சுத்த ஆகாயத்தில் மேகம் உண்டாகிறது, மேகங்களின் கூட்டம் ஏற்படுகிறது மழை பொழியத் தொடங்கும் போது மேகங்கள் கருமேகமாகின்றன. கருமேகங்களிலிருந்து இடி இடிக்கிறது; அவற்றில் மின்னல் மின்னுகிறது; நீர்த்துளிகள் வீழ்கின்றன. சில சமயம் பனிக்கட்டிகள் விழுகின்றன. இவ்வளவும் நடந்தாலும், நடக்கும் போதும் ஆகாயம் சுத்தமாகவே இருக்கிறது. அதில் ஒரு மாற்றமும் ஏற்படுவதில்லை, இவ்விதமே ஈசுவரன் அந்த ஆகாயத்தை போல இருகின்றான். அதில் உலகத்தின் தோற்றம் மறைவு, தேசம், காலம், வஸ்து, வ்யக்தி, நிகழ்ச்சி, சூழ்நிலை முதலியவற்றில் மாற்றம் போன்ற பல நிகழ்ச்சிகள் ஏற்படுகின்றன. ஆனால் அது (ஈசுவர தத்வம்) எப்பொழுதும் உள்ளது போலவே, விகாரமற்று - மாறுதலற்று இருக்கிறது.

பகவானுடைய ஸாகார விக்ரஹம்

Koviloor Digital Library

(தோற்றமுள்ள உருவம்) ஜீவர்களின் சரீரங்களைப் போல் எலும்பு, சதை இவற்றால் உருவானதன்று. ஜீவர்களின் உடல் பாப-புண்ணியமயமானது; அநித்யமானது, நோய் வாய்ப்படுவது; லௌகிக மானது, மாற்றம் அடைவது, ஐம்பூதங்களாலானது. ஆணின் வீரியம்-பெண் தாதுவிலிருந்து உற்பத்தி யாவது. ஆனால் பகவானுடைய உருவம் பாப புண்ணியமற்றது. நித்தியமானது. நோய் நொடியற்றது. அலௌகிகமானது. விகாரம் (மாறுதல்) கொள்ளாதது; திவ்யமானது. தோற்றம் எடுக்கும் ஆற்றல் உடையது. மற்ற ஜீவன்களுடன் ஒப்பிடும்போது தேவதைகளின் உடல்களும் திவ்யம்தான், ஆனால் பகவானுடைய விக்ரஹமோ (வடிவமோ) அவர்களுடைய சரீரத்தி லிருந்தும் மாறுபட்டது. அதை தேவதைகளே எப்போதும் பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். அப்படிப்பட்ட திவ்ய சரீரம் அது.

தே$_3$வா அப்யஸ்ய ரூபஸ்யநித்யம் த$_3$ர்ஶந காங்க்ஷிண : (கீதை - 11/52)

தேவர்கள் கூட இந்த என் உருவத்தை எப்போதும் பார்க்க விரும்புபவர்களாக இருக்கிறார்கள் அப்படிப்பட்ட **'ஸுது$_3$ர்த$_3$ர்சமித$_3$ம் ரூபம்'** - காணக்

Koviloor Digital Library

கிடைக்காத என்னுடைய உருவம் - என்கிறார் கண்ணபிரான். அவர் தமது விசுவரூபத்தை அர்ஜுனனுக்குக் காட்டிய பிறகு சொன்னது இது. பகவான் ராம க்ருஷ்ணாவதாரங்களில் தாய் கோசலை வயிற்றிலும், தேவகி வயிற்றிலும் கர்ப்பமாகிப் பிறக்கவில்லை. முதலில் அவர் சங்கம் சக்ரம், கதை, பத்மம் முதலியன தாங்கிய தமது திவ்ய ரூபத்தைக் காட்டிவிட்டுப் பிறகு தாய் கேட்டுக் கொண்டதற் கிணங்கக் குழந்தையாக மாறி விளையாடத் தொடங்கினார். பகவான் ஸ்ரீராமனின் பிறப்பைப் பற்றி கோஸ்வாமி துளஸிதாஸர் சொல்வதைப் பார்ப்போம்.

பஏ பாகட க்ருபாலா தீ$_3$ந த$_3$யாலா கௌஸல்யா ஹிதகாரீ
ஹர்ஷித மஹதாரி முநி மநஹாரி அத்$_3$புத ரூப பிசாரீ
லோசந அபிராமா தநு கநஸ்யாமா நிஜ ஆயுத புஜ சாரீ
பூஷன வன மாலா நயந பிஸாலா ஸோபாஸிந்து கராரீ
மாதா புநி போலீஸோ மதி டோலீ தஜஹு தாத
யஹ் ரூபா
கீஜை ஸிஸுலீலா அதிப்ரியஸீலா யஹ ஸுக பரம அநூபா
ஸுநிபசந ஸுஜாநா ரோதந டானா ஹோஇ பாலக
ஸுர:பூபா

கருணை கொண்டவன், ஏழை பங்காளன், கோசலைக்கு மங்களம் செய்ய வந்தவன் வெளிப் பட்டான். முனிவர் மனங்களையும் கொள்ளை

Koviloor Digital Library

கொள்ளும் அந்த அற்புதத் தோற்றத்தைக் கண்ட தாய் மனம் மகிழ்ந்தாள். அழகிய கண்கள்; உடல் ஆழ்ந்த மேக நிறம்; நான்கு கைகள்; அவற்றில் ஆயுதங்கள், ஆபரணங்கள், துளஸிமாலை, விசாலமான கண்கள்; அழகின் அலையடிக்கும் கடல் - இப்படித் தோற்றம் தந்தார் பகவான் ஸ்ரீமந் நாராயணன்.

பிறகு தாயார் மனம் மயங்கி அவரிடம் சொன்னார், ''அப்பனே! இந்த உருவத்தை மறைத்துக் கொள். குழந்தையாகி லீலைகள் செய். அதுதான் எனக்குப் பிரியமானது; ஒப்பற்ற இன்பம் தருவதாக இருக்கும்.'' இதைக் கேட்டு ஸர்வக்ஞனான இராமபிரான் முதலில் அழத் தொடங்கினார். தேவர்களின் சக்ரவர்த்தி குழந்தையானார்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணனைப் பற்றி பாகவதம் சொல்கிறது :

''உபஸம்ஹர விஶ்வாத்மந்நதோ ரூபமலௌகிம் ஶங்க சக்ரக$_3$த$_3$ாபத்$_3$ம ஶ்ரியாஜுஷ்டம் சதுர்பு$_4$ஜம்''॥

(ஸ்ரீமத் பாகவதம் 10/3/30)

தாய் தேவகி சொன்னார் : ''விச்வாத்மாவே! (உலகிற்கே ஆத்மாவானவரே!) சங்கம், சக்கரம், கதை, பத்மம் இவற்றின் அழகுடன் விளங்கும், இந்த நான்கு கைகள் கொண்ட உங்களது அலௌகிக (உலகத்தில்

Koviloor Digital Library

இல்லாத) திவ்யரூபத்தை இப்போது மறைத்துக் கொள்ளுங்கள்'' அப்போது பகவான் தாயும் தந்தையும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே குழந்தையாக உருவை மாற்றி எடுத்தக் கொண்டார்.

பித்ரோ: ஸம்பஶ்யதோ: ஸத்யோ பபூவ ப்ராக்ருதஶிஶு:
(ஸ்ரீமத் பாகவதம் 10/3/46)

பகவான் இராமபிரான் எப்போது தன்னுடைய ஸ்ரீவைகுண்ட லோகத்துக்குச் செல்லும் போதே அவர் மறைந்து விட்டார். ஜீவாத்மாக்களின் சரீரங்களைப் போல் அவருடைய சரீரம் இங்கே கிடக்கவில்லை. மாறாக அவர் இதே சரீரத்துடன்தான் தன் தமது திவ்ய தாமத்துக்கு ஏகினார்.

பிதாமஹவச: ஶ்ருத்வா விநிஶ்சித்ய மஹாமதி : ।
விவேஶ வைஷ்ணவம் தேஜஸஶரிர: ஸஹாநுஜ : ॥
(வால்மீகிராமாயணம் உத்தர. 110/12)

''பேரறிவாளரான பகவான் இராமபிரான் உலகின் பாட்டனாரான பிரம்மாவின் சொற்களைக் கேட்டு, அவர் சொன்னதற்கேற்ப மனதில் உறுதி செய்து கொண்டு, மூன்று ஸஹோதரர்களுடனும் அதே சரீரத்திலிருந்து விஷ்ணு ஒளியில் நுழைந்து விட்டார்.

பகவான் ஸ்ரீகிருஷ்ணனைப் பற்றியும்

Koviloor Digital Library

இவ்விதமே சொல்லப்படுகிறது.

"லோகாபிராமாம் ஸ்வதநும் தாரணாத்யாந மங்களம்
யோகதாரணயா(ஆ) க்நேய்யாதக்த்வா தாமாவிஶத் ஸ்வகம்॥
(ஸ்ரீமத் பாகவதம் 11/31/6)

'தாரணைக்கும் த்யானத்துக்குரிய அதிமங்கள ஸ்வரூபமான தன் உலகை மயக்கும் அழகிய விக்ரஹத்தை யோக தாரணையில் வெளியேறிய அக்னியின் மூலமாக சாம்பலாக ஆக்கிக் கொள்ளாமலேயே தன் இருப்பிடத்துக்கு, தன் சரீரத்துடனேயே சென்று அடைந்தார்.'

பகவான் விக்ரஹத்தை (திவ்ய சரீரத்தைப்) பற்றி வால்மீகி மஹரிஷி பகவான் ஸ்ரீராமனிடம் பின்வருமாறு சொல்கிறார் : (இது துளஸி ராமாயணத்தில் வரும் கதை.)

சித$_3$ாநந்த$_3$மய தேஹ தும்ஹாரீ ।
பிகத பிகார ஜாந அதி$_4$காரீ ॥
நரதநு தரேஹுஸந்த ஸுரகாஜா ।
கஹஹு கரஹு ஜஸப்ராக்ருத ராஜா ॥
மானஸம் (2/127/3)

உன் உடம்பு சிதாநந்த மயமானது. அறியும் தகுதியுள்ளவர்கள் (அதிகாரிகள்) இது விகாரம் (மாறுதல்) அற்றது என்று அறிவார்கள்.

Koviloor Digital Library

ஸாதுக்களுக்காகவும் தேவர்களுக்காகவும் இந்த மனித உடலை ஏற்றுக் கொண்டு ஸாதாரண மனிதர் களுடைய அரசனைப் போல் பேசுகிறாய்! நடந்து கொள்கிறாய் (நடிக்கிறாய்.)

ஒருமுறை ஸனகர் முதலிய மஹரிஷிகள் ஸ்ரீவைகுண்டத்திற்குச் சென்று கொண்டிருந் தனர். அங்கே பகவானுடைய வாயிற்காப்பாளர் அவர்களை உள்ளே செல்லவிடாமல் தடுத்தனர். அதனால் அந்த மஹரிஷிகள் அவர்களுக்குச் சாபம் கொடுத்து விட்டனர். பகவான் தம்முடைய பணியாட்கள், ஸனகர் முதலியோரை அவமதித்து விட்டார்கள் என்று அறிந்து, அங்கே எழுந்தருளினார். அப்பொழுது பகவானைத் தரிசனம் செய்ததால் அவர்கள் தனித்தவொரு விசித்திரமான நிலையை அடைந் தார்கள். அவர்கள் பகவானுடைய பாதாரவிந்தங்களில் விழுந்து வணங்கினர்.

தஸ்யாரவிந்த$_3$ நயநஸ்ய பத$_3$ாரவிந்த।
கிஞ்ஜல்க மிஶ்ர துளஸீமகரந்த வாயு : ॥
அந்தர்க$_3$த: ஸ்வவிவரேண சகார தேஷாம் ।
ஸங்க்ஷோபமக்ஷர ஜுஷாமபி சித்த தந்வோ : ॥

(ஸ்ரீமத்பாகவதம் 3/15/43)

இதன் பொருள் : அவர்கள் வணங்கிய போது தாமரைக்

Koviloor Digital Library

கண்ணனான அந்த பகவானுடைய பாதத்தாமரையின் மகரந்தத்தூள் சேர்ந்த துளஸிக்கொத்து தரும் காற்று அவர்களுடைய நாசிகளில் நுழைந்ததனால், பரமாத்மாவிடத்தில் நித்தியமாக இருந்து கொண் டிருக்கும் ஞானிகளான அந்த மஹாத்மாக்களுடைய சித்தமும், உடலும் கூடக் கலக்கமுற்றன. அதாவது அந்த மணம் அவர்களுடைய உள்ளத்தையும் உடலையும் என்னவோ செய்து ஆட்டிவிட்டது.

மனத்தை ஈர்க்க கூடிய சப்தம் முதலிய விஷயங்களில், நறுமணத்தைவிட தனிச்சிறப்பு வயந்த பொருள் இல்லை. ஆனால் பகவானுடை பாத கமலங்களின் வாஸனையினால் நித்தியமாகவும், நிரந்தரமாகவும் பரமாத்ம ஸ்வரூபத்தில் மூழ்கிக் கிடக்கின்ற ஸனகர் முதலியோருடைய சித்தத்திலும் கூட ஓர் இன்பக் கிளர்ச்சி ஏற்பட்டுவிட்டது. காரணம் இது சாதாரண மணமன்று; தெய்விக நறுமணம் ஆகும்.

ஜீவன் முக்தர்களாலும் உபாஸிக்கப்பட்ட ஈசுவரதத்வத்தில் அசையாத நம்பிக்கை கொண்டு அனைவரும் ஆன்மிக மேன்மை பெறுவோமாக!

Koviloor Digital Library

மொழிபெயர்ப்பாளர்கள் - தேவை

கோரக்பூர், கீதாப்ரஸ் நிர்வாகத்தினர் வெளியிட்டுள்ள ஸ்வாமி **ராம்ஸுக தாஸ்ஜீ மஹராஜ், ஸ்ரீஜயதயால் கோயந்தகா** மாற்றும் பல சான்றோர்களின் ஹிந்தி மூலத்தில் உள்ள புத்தகங்களைத் தமிழில் மொழிபெயர்க்கும் பணியை மேற்கொள்ள ஸமஸ்க்ருத, ஹிந்தி/தமிழ் மொழிவல்லுநர்கள் தேவைப்படுகின்றனர். மேலும் ஸமஸ்கிருதம், ஹிந்தியிலிருந்து மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஆங்கிலம் மொழிபெயர்ப்பாளர்கள் தேவை. மொழிபெயர்ப்பிற்குத் தகுந்த சன்மானம் தரப்படும். விருப்பம் உள்ளோர் அடியிற்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தமிழில் ஏற்கனவே ஸ்ரீமத்பகவத்கீதை அச்சடித்துள்ளனர். மேலும் பல பெரிய புத்தகங்கள் அச்சடிக்க உள்ளார்கள்.

கோபால் ஸேவா ட்ரஸ்ட்

81, மோசிகீரனார் தெரு,
பகவத்கீதா நகர், ஈரோடு-3
☎ 0424, 213976

* * * * * * * * * * * * * * * * * * *

R. தேவராஜன்
24, சித்திரக்குளம் தெரு,
மைலாபூர், சென்னை-4
☎ 4869247 (044)

டாக்டர் **V.S. நரசிம்மன்**
C/o, V.S. ஸ்ரீனிவாசன்
7, ராமச்சந்திர ஐயர் தெரு
டி.நகர், சென்னை-17
☎ 8222172 (044)

Koviloor Digital Library

...LOOR ANDAVAR

A. No. 12901

...BRARY, KOVILOOR

Koviloor Digital Library

First Edition 1999 5,000 Copies

Price Rs :
விலை ரூ : } 2.00

கிடைக்குமிடம் :

கோபால் ஸேவா ட்ரஸ்ட்,
81, மோசிகீரனார் வீதி,
பகவத்கீதா நகர்
ஈரோடு - 638 003.

போன் : 213976, பேக்ஸ் : (0424) 213274